# புதிய சில்வர்டவுன் சுரங்கப்பாதைத் திறப்பு **7** ஏப்ரல் **2025** பிளாக்வால் சுரங்கப்பாதை அருகில்

குடியிருப்பவர்கள் தயாராகிக் கொள்ள உதவும் வழிகாட்டி

MAYOR OF LONDON

TRANSPORT FOR LONDON
EVERY JOURNEY MATTERS

# உள்ளடக்கம்

சில்வர்டவுன் சுரங்கப்பாதை அறிமுகம்......3
சுரங்கப்பாதைகளின் வழியாகச் செல்லும் பேருந்து வழித்தடங்கள்......4
இலவசப் பேருந்துக் கட்டணங்கள்......4
ரீஃபண்டு செய்யப்படும் DLR கட்டணங்கள்......5
கட்டணங்கள் என்ன மற்றும் அவை எப்போது வசூலிக்கப்படும்?......6
கட்டணங்களை எப்படிச் செலுத்த வேண்டும், எப்போது செலுத்த வேண்டும்?......8
உள்ளூரில் குடியிருக்கும் குறைந்த வருமானம் உடையோருக்கான குறிப்பிட்ட நலத்திட்டங்களைப் பெறுபவர்களுக்கான தள்ளுபடிகள்......10
உள்ளூர் சிறு வணிகங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கான தள்ளுபடி......11
100 சதவீதத் தள்ளுபடி......12
விதிவிலக்குகள் மற்றும் NHS கட்டணம் திருப்பிச் செலுத்தும் திட்டம்......13
புதிய கிராஸ் ரிவர் சைக்கிள் ஷட்டில்......14
நகர் முழுவதற்குமான பொதுப் போக்குவரத்து......15

# சில்வர்டவுன் சுரங்கப்பாதை அறிமுகம்

சில்வர்டவுன் மற்றும் கிரீன்விச் தீபகற்பத்தை இணைக்கும் வகையில் தேம்ஸ் நதியின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய சில்வர்டவுன் சுரங்கப்பாதை 7 ஏப்ரல் 2025 அன்று திறக்கப்பட இருக்கிறது.

புதிய சுரங்கப்பாதை போக்குவரத்து மிகுந்த நேரத்தில் வேகமாகப்* பயணம் செய்ய உதவுகிறது மற்றும் கிராஸ் ரிவர் பொதுப் போக்குவரத்தில் புதிய இணைப்புகளுக்கு வழிவகுக்கிறது. பிளாக்வால் சுரங்கப்பாதை மூடப்படும்போது சாலையை உபயோகிப்பவர்களுக்கு மாற்றுப் பாதையாகவும் இந்தச் சுரங்கப்பாதை செயல்படும்.

தற்போது பிளாக்வால் சுரங்கப்பாதையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து போக்குவரத்து நெரிசல் நிலவி வருகிறது, ஆண்டுக்கு 700 முறைகளுக்கு மேல் அடிக்கடி மூடப்படுவதால், காற்றுத்தரம் மோசமடைவதுடன் வாகனங்கள் நீண்ட நேரத்திற்கு அணிவகுத்து நிற்கின்றன. புதிய சுரங்கப்பாதை அமைக்கப்படாவிட்டால், பிளாக்வால் சுரங்கப்பாதையைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றுத் தரமும் நெரிசலும் இன்னும் மோசமடையும் என முன்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சுரங்கப்பாதை திறக்கப்பட்டதும், இரண்டு சுரங்கப்பாதைகளிலும் அதன் வழியாகச் செல்லும் வாகனங்களுக்கு ஒவ்வொரு வழிக்கும் உபயோகிப்பாளர் கட்டணம் வசூலிக்கப்படும், உங்களுக்கோ உங்கள் வாகனத்திற்கோ விலக்களிக்கப்பட்டிருந்தால் மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படாது.

இந்த உபயோகிப்பாளர் கட்டணங்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், கட்டுமானச் செலவுகளை மீட்டெடுக்கவும், சுரங்கப்பாதையை தொடர்ந்து இயக்கவும் பராமரிக்கவும் உதவும். கூடுதல் வருவாய் ஏதேனும் கிடைத்தால் அது இலண்டனின் போக்குவரத்து வலைப்பின்னலை மேம்படுத்துவதற்காக முதலீடு செய்யப்படும்.

*போக்குவரத்து மிகுந்த நேரங்கள் (திங்-வெள் 06:00 - 10:00 வரை வடக்குநோக்கி,
16:00 - 19:00 வரை தெற்குநோக்கி), மாதிரித் தரவின் அடிப்படையில்.

# சுரங்கப்பாதைகளின் வழியாகச் செல்லும் பேருந்து வழித்தடங்கள்

பிரத்தியேகப் பேருந்துத் தடத்தின் மூலம் அதிகப்படியான கிராஸ்-ரிவர், பூஜ்ய உமிழ்வு* பேருந்துச் சேவையை புதிய சில்வர்டவுன் சுரங்கப்பாதை வழங்குகிறது.

பிளாக்வல் சுரங்கப்பாதை வழியாக ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் பேருந்து வழித்தடத்துடன் கூடுதலாக போக்குவரத்து மிகுந்த நேரங்களில் (07:00 – 19:00 திங்கள் – வெள்ளி) ஒரு மணிநேரத்திற்கு 21 பேருந்துகள் மறுகரைக்கு இயக்கப்படும்.

இந்த வழித்தடங்களில் பின்வருவன அடங்கும்:

நியூ சூப்பர்லூப் SL4 – கேனரி வார்ஃபில் உள்ள வெஸ்ட்ஃபெர்ரி சர்க்கஸ் மற்றும் குரூவ் பார்க் இடையே இயங்கும் சில்வர்டவுன் சுரங்கப்பாதை வழியாக நகரத்தின் முக்கியப் பகுதிகளில் நின்று செல்லும் எக்ஸ்பிரஸ் சேவை

ரூட் 129 – சில்வர்டவுன் சுரங்கப்பாதை வழியாக கிரேட் ஈஸ்டர்ன் குவே மற்றும் லூவிஷாம் இடையே இயங்கும் வகையில் நீட்டிக்கப்பட்டுள்ளது

ரூட் 108 – பிளாக்வால் சுரங்கப்பாதை வழியாக ஸ்டாஃப்போர்டு மற்றும் லூவிஷாம் இடையே இயங்குகிறது

# இலவசப்பேருந்துக் கட்டணங்கள்

7 ஏப்ரல் 2025 தொடங்கி குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு சுரங்கப்பாதைகள் வழியாகச் செல்லும் வழித்தடங்களில் இலவச பே அஸ் யு கோ பேருந்துக் கட்டணச் சலுகை வழங்கப்படும்.

*டெயில்பைப்பில்

பேருந்தில் ஏறும்போது நீங்கள் தேர்வுசெய்த பேமெண்ட் முறை மூலம் டச் இன் செய்ய வேண்டும், உங்கள் பயணத்திற்குக் கட்டணம் வசூலிக்கப்படாது.

சலுகைக்குத் தகுதிபெற, நீங்கள் தேர்வுசெய்த பேமெண்ட் முறை பயணத்திற்குச் செல்லத்தக்கதாகவும் உங்கள் ஆய்ஸ்டர் கார்டில் பே அஸ் யு கோ கிரெடிட் இருப்பதையும் உறுதிசெய்துகொள்ளுங்கள்.

# ரீஃபண்டு செய்யப்படும் DLR கட்டணங்கள்

7 ஏப்ரல் 2025 தொடங்கி குறைந்தபட்சம் 12 மாதங்களுக்குப் பின்வரும் நிலையங்களுக்கு இடையே பே அஸ் யு கோ DLR கட்டணங்கள் ரீஃபண்டு சலுகையும் வழங்கப்படுகிறது:

கிரீன்விச் அல்லது கட்டி சார்க் – ஐலேண்ட் கார்டன்ஸ் ஊல்விச்

ஆர்சனல் – கிங் ஜார்ஜ் V

நிலையத்தில் நீங்கள் தேர்வுசெய்த பேமெண்ட் முறை மூலம் டச் இன், டச் அவுட் செய்ததும் உங்கள் பயணத்திற்கான கட்டணம் வசூலிக்கப்படும்.

கான்டாக்லெஸ் பேமெண்ட்களுக்கு உங்கள் பயணம் முடிந்து குறைந்தபட்சம் 14 நாட்களுக்குள் உங்கள் வங்கிக் கணக்கில் தானாகவே பணம் ரீஃபண்டு வழங்கப்படும்.

ஆய்ஸ்டர் கார்டு பேமெண்ட்களுக்கு உங்கள் பயணம் முடிந்து 14 நாட்களுக்குப் பிறகு ரீஃபண்டு செயலாக்கப்படும். அதன் பின் 4 நாட்களுக்குள் யெல்லோ ரீடரில் உங்கள் ஆய்ஸ்டர் கார்டை டச் செய்து உங்கள் ரீஃபண்டை பெற்றுக்கொள்ளலாம்.

பேருந்து மற்றும் DLR பயணச் சலுகை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு tfl.gov.uk/silvertown-blackwall இணையதளத்தைப் பார்வையிடவும்

# கட்டணங்கள் என்ன மற்றும் அவை எப்போது வசூலிக்கப்படும்?

ஆண்டு முழுவதும், 24 மணிநேரத்திற்கும் சுரங்கப்பாதைகள் திறந்திருக்கும், ஆனால் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த உதவும் வகையில் குறிப்பிட்ட நேரங்களுக்குக் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.

சில்வர்டவுன் மற்றும் பிளாக்வால் சுரங்கப்பாதைகள் இரண்டிலும் அதன் வழியாகச் செல்லும் வாகனங்களுக்கு ஒவ்வொரு வழிக்கும் உபயோகிப்பாளர் கட்டணங்கள் வசூலிக்கப்படும், உங்களுக்கோ உங்கள் வாகனத்திற்கோ விலக்களிக்கப்பட்டிருந்தால் மட்டுமே கட்டணங்கள் வசூலிக்கப்படாது.

ஆண்டு முழுவதும் (கிறிஸ்துமஸ் (டிசம்பர் 25) நாளைத் தவிர்த்து) வாரத்தின் 7 நாட்களுக்கும் 06:00 – 22:00 வரை கட்டணங்கள் வசூலிக்கப்படும்

ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்வதன் மூலம், அதிகப் பயன்பாடு இல்லாத நேரத்தில் குறைந்த கட்டணங்களைப் பெறலாம்.

ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்ய
tfl.gov.uk/auto-pay இணையதளத்தைப் பார்வையிடவும்

சுரங்கப்பாதைக் கட்டணங்கள், DVLA வாகன வகைப்பாடு போன்றவற்றிற்கு tfl.gov.uk/tunnel-charges இணையதளத்தைப் பார்வையிடவும்.

குறிப்பிட்ட நபர்கள் மற்றும் வாகனங்களுக்கு விலக்களிக்கப்படுகிறது, மேலும் தகவலுக்கு tfl.gov.uk/tunnel-discounts இணையதளத்தைப் பார்வையிடவும்

| | கட்டணங்கள் 06:00 – 22:00 வரை | | | 22:00 – 06:00 வரை |
|---|---|---|---|---|
| வாகன வகைகள் | ஆட்டோ பே வழியாகச் செலுத்தப்படும் கட்டணங்கள் | | மொபைல், ஆன்லைன் பேமெண்ட் அல்லது செயலி வழியாகச் செலுத்தப்படும் கட்டணங்கள் | கட்டணங்கள் பொருந்தாது |
| | போக்குவரத்து மிகுந்த நேரக் கட்டணங்கள்<br><br>திங்கள் – வெள்ளி மட்டும்<br><br>வடக்குநோக்கி 06:00 – 10:00 வரை<br><br>தெற்குநோக்கி 16:00 – 19:00 வரை | அதிகப் பயன்பாடு இல்லாத நேரக் கட்டணங்கள்<br><br>06:00 – 22:00க்கு இடையே மற்ற நேரங்களுக்குப் பொருந்தும் வார இறுதி உட்பட | எல்லா நேரங்களிலும் | |
| மோட்டார் சைக்கிள், மொபட், மோட்டார் டிரைசைக்கிள் | £2.50 | £1.50 | £2.50 | இலவசம் |
| கார்கள் மற்றும் சிறிய வேன்கள் DVLA வகைப்பாடு M1, N1 (i) | £4.00 | £1.50 | £4.00 | இலவசம் |
| பெரிய வேன்கள் DVLA வகைப்பாடு N1(ii), N1 (iii) | £6.50 | £2.50 | £6.50 | இலவசம் |
| கனரக சரக்கு வாகனங்கள்* | £10.00 | £5.00 | £10.00 | இலவசம் |
| பேமெண்ட் செலுத்தாதற்கான அபராதக் கட்டண அறிவிப்பு (PCN) – £180 (இரண்டு வாரங்களுக்குள் செலுத்தினால் £90 குறைக்கப்படும்; ஒரு வாகனத்திற்கு ஒரு நாளைக்கு அதிகபட்சம் ஒரு PCN) | | | | |

*சில்வர்டவுன் சுரங்கப்பாதையில் HGVகள் மற்றும் பேருந்துகளுக்குப் பிரத்தியேகப் பாதை உள்ளது.

# கட்டணங்களை எப்படிச் செலுத்த வேண்டும், எப்போது செலுத்த வேண்டும்?

பணம் செலுத்த எளிதான வழி ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்வதாகும். ஆட்டோ பே சேவை வழியாகப் பணம் செலுத்துவதன் மூலம் அதிகப் பயன்பாடு இல்லாத நேரங்களில் குறைந்த கட்டணங்களைப் பெறலாம்.

உங்கள் கணக்கில் டைரக்ட் டெபிட் மேன்டேட் அல்லது டெபிட் கார்டு அல்லது கிரெடிட் கார்டை அமைக்கலாம். நீங்கள் சில்வர்டவுன் மற்றும் பிளாக்வால் சுரங்கப்பாதைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டுமா என்பதை சிஸ்டம் தானாகவே சரிபார்த்து, உங்கள் பதிவுசெய்யப்பட்ட பேமெண்ட் முறையில் இருந்து ஒவ்வொரு மாதமும் தானாகவே பணம் வசூலித்துக் கொள்ளும்.

பதிவுசெய்வதற்கு எந்தக் கட்டணமும் இல்லை, ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்வதன் மூலம் பதிவுசெய்த வாகனத்திற்குக் கட்டணம் செலுத்த மறந்துவிட்டீர்கள் அல்லது வாகனத்திற்கு அபராதம் விதிக்கப்படும் என்ற கவலை இல்லை.

ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்ய
tfl.gov.uk/auto-pay இணையதளத்தைப் பார்வையிடவும்

ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்யாமல் பின்வரும் பேமெண்ட் முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்தினால், அதிகப் பயன்பாடு இல்லாத நேரத்திற்கான கட்டணச் சலுகையை நீங்கள் பெற முடியாது.

அதிகாரப்பூர்வ TfL Pay to Drive in London செயலி மூலம் நீங்கள் கட்டணம் செலுத்தலாம், Apple App Store மற்றும் Google Play storeஇல் இருந்து இந்தச் செயலியைப் பதிவிறக்கிக் கொள்ளலாம்.

நீங்கள் ஆன்லைனில் tfl.gov.uk/pay-to-drive இணையதளத்தில் அல்லது திங்கள் – வெள்ளி 08:00 – 20:00 வரை 0343 222 2222 என்ற தொலைபேசி எண் மூலமாகக் கட்டணம் செலுத்தலாம். சேவை மற்றும் நெட்வொர்க் கட்டணங்கள் பொருந்தக்கூடும் (விவரங்களுக்கு tfl.gov.uk/terms இணையதளத்தைப் பார்வையிடவும்).

நீங்கள் ஆட்டோ பே சேவைக்குப் பதிவுசெய்யாமல் ஏதேனும் ஒரு சுரங்கப்பாதை வழியாகப் பயணம் செய்கிறீர்கள் என்றால், பயணம் செய்ததிற்குப் பிறகு மூன்றாவது நாளின் நள்ளிரவுக்குள் பணம் செலுத்த வேண்டும், அல்லது பயணத்திற்கு 90 நாட்களுக்கு முன்பு வரை முன்பணம் செலுத்தலாம்.

# இது எப்படி வேலை செய்கிறது?

உங்கள் வாகனம் சுரங்கப்பாதையில் நுழையும்போது கேமராக்கள் உங்கள் வாகனத்தின் நம்பர் பிளேட்டைப் படித்து, நீங்கள் கட்டணம் செலுத்தியுள்ளீர்களா அல்லது உங்கள் வாகனத்திற்கு விலக்களிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கும்.

சுரங்கப்பாதையின் இருபுறமும் தடுப்புகளோ சுங்கச்சாவடிகளோ இருக்காது, சுரங்கப்பாதைக்குள்ளேயும் நீங்கள் கட்டணம் செலுத்த இயலாது.

# உள்ளூரில் குடியிருக்கும் குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கான குறிப்பிட்ட நலத்திட்டங்களைப் பெறுபவர்களுக்கான தள்ளுபடிகள்

12 ஈஸ்ட் மற்றும் சவுத்-ஈஸ்ட் லண்டன் பர்ரோ மற்றும் சிட்டி ஆஃப் லண்டனில் வசிக்கும் குறிப்பிட்ட நலத்திட்டங்களைப் பெறும் குடியிருப்போர், சுரங்கப்பாதை உபயோகக் கட்டணத்தில் 50 சதவீதம் தள்ளுபடி பெறலாம்

இந்தத் தள்ளுபடி 7 ஏப்ரல் 2025 அன்று தொடங்கி குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

தகுதிபெறும் நலத்திட்டங்கள்:

- வருமான உதவி
- வருமானம் தொடர்பான வேலைவாய்ப்பு & உதவித் தொகை
- வருமான அடிப்படையிலான வேலைதேடுபவர்களுக்கான அலவன்ஸ்
- யுனிவர்சல் கிரெடிட்
- பென்ஷன் கிரெடிட்
- குழந்தை வரி கிரெடிட்
- வேலை வரி கிரெடிட்
- பராமரிப்பாளர் அலவன்ஸ்
- வீட்டுவசதி நலத்திட்ட உதவி

நீங்கள் பார்க்கிங் & டேகன்ஹம், பெக்ஸ்லி, புரோம்லி, சிட்டி ஆஃப் லண்டன், கிரீன்விச், ஹேக்னி, ஹேவரிங், லூவிஷாம், நியூஹாம், ரெட்பிரிட்ஜ், சவுத்வார்க், டவர் ஹேம்லட்ஸ் அல்லது வால்தாம் ஃபாரஸ்ட்டில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

[tfl.gov.uk/east-london-discount](https://tfl.gov.uk/east-london-discount) இணையதளத்திற்குச் சென்று இந்தத் தள்ளுபடிக்கு இப்போதே முன்பதிவு செய்யுங்கள்

# உள்ளூர் சிறுவணிகங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கான தள்ளுபடி

தகுதிபெறும் சிறுவணிகங்கள், தனிநபர் வர்த்தகர்கள் மற்றும் அறக்கட்டளைகள் அதிகபட்சமாக மூன்று வாகனங்களுக்கு அதிகப் பயன்பாடு இல்லாத நேரக் கட்டணத்தில் £1 தள்ளுபடி பெறலாம்.

இந்தத் தள்ளுபடி 7 ஏப்ரல் 2025 தொடங்கி குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும். ஆட்டோ பே சேவையில் TfL உடன் பதிவுசெய்யப்படுள்ள வாகனங்களுக்கு மட்டுமே அதிகப் பயன்பாடு இல்லாத நேரக் கட்டணம் கிடைக்கும்.

தகுதிபெறும் வணிகங்கள் அல்லது அறக்கட்டளை பின்வரும் ஒரு பர்ரோவில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்: கிரீன்விச், நியூஹாம் அல்லது டவர் ஹேம்லட்ஸ்.

உங்கள் சிறு வணிகம் தகுதிபெறுகிறதா என்று அறிவதற்கும் இந்தத் தள்ளுபடிக்கு முன்பதிவு செய்வதற்கும் tfl.gov.uk/business-discount இணையதளத்தைப் பார்வையிடவும்

# 100 சதவீதத் தள்ளுபடி (TfL உடன் பதிவுசெய்யும்போது)

இந்தத் தள்ளுபடி பின்வரும் நபர்கள் மற்றும் வாகனங்களுக்குப் பொருந்தும்:

- நீல பேட்ஜ் வைத்திருப்பவர்கள் – 100 சதவீத நீல பேட்ஜ் தள்ளுபடி பெற நீங்கள் TfL உடன் பதிவுசெய்ய வேண்டும். நீங்கள் இந்தத் தள்ளுபடிக்குப் பதிவுசெய்தால் மட்டுமே போதுமானது கூடுதலாக எதையும் செய்யத் தேவையில்லை, இரண்டு சுரங்கப்பாதைகளிலும் உங்களுக்குக் கட்டணம் வசூலிக்கப்படாது.
- TfL உடன் பதிவுசெய்யப்பட்ட அனைத்து கருப்பு நிற டாக்சிகள் மற்றும் பூஜ்ய உமிழ்வுத் திறன் கொண்ட வாகனங்கள் மற்றும்/அல்லது வீல்சேர் ஆக்சஸபிளிட்டி கொண்ட தனியார் வாடகை வாகனங்கள் (PHVs)
- மீட்பு வாகனங்கள் மற்றும் பிரேக்டவுன் வாகனங்கள் – இந்தத் தள்ளுபடிக்குத் தகுதிபெற விண்ணப்பிக்க வேண்டும்.

உங்கள் வாகனத்தைப் பதிவுசெய்ய அல்லது இந்தத் தள்ளுபடிக்கு விண்ணப்பிக்க tfl.gov.uk/tunnel-discounts இணையதளத்தைப் பார்வையிடவும்

# விதிவிலக்குகள்

பின்வரும் வாகனங்களுக்குச் சுரங்கப்பாதைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது, இதற்காகத் தனியாக எதையும் செய்ய வேண்டியதில்லை:

- DVLA-பதிவுபெற்ற மினிபஸ்கள், பேருந்துகள், கோச்கள்
- NHS வாகனங்களுக்கு வாகன வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது

தள்ளுபடிகள் மற்றும் விதிவிலக்குகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு tfl.gov.uk/tunnel-discounts இணையதளத்தைப் பார்வையிடவும்

# NHS நோயாளி மற்றும் ஊழியர்களுக்குக் கட்டணம் திரும்ப வழங்குதல்

- பொதுப் போக்குவரத்தில் பயணிக்க முடியாத அளவிற்கு நோயுற்றுள்ளனர் என மருத்துவரீதியாகக் கண்டறியப்படும் NHS நோயாளிகள் மருத்துவமனைக்குச் சென்று வரும் பயணத்திற்கான கட்டணத்தைத் திரும்ப வழங்கும்படி கோரிக்கை விடுக்கலாம். இதற்கு நீங்கள் தகுதிபெறுகிறீர்களா என்பதை உங்கள் மருத்துவமனை உங்களுக்குத் தெரிவிக்கும். கட்டணத் தொகையைத் திரும்பப் பெறும் கோரிக்கை தொடர்பான கூடுதல் தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு tfl.gov.uk/nhs-reimbursement இணையதளத்தைப் பார்வையிடவும்.
- NHS கட்டணம் திரும்ப வழங்குதல் திட்டத்தின் கீழ் NHS ஊழியர்கள் கட்டணத்தொகையைத் திரும்பப் பெறத் தகுதிபெறக்கூடும் கட்டணத் தொகையைத் திரும்பப் பெறும் கோரிக்கை தொடர்பான முழுமையான தகுதி விவரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு tfl.gov.uk/nhs-reimbursement இணையதளத்தைப் பார்வையிடவும்.

# புதிய கிராஸ் ரிவர் சைக்கிள் ஷட்டில்

புதிய, பிரத்தியேக, இலவச சைக்கிள் ஷட்டில் சேவையைப் பயன்படுத்தி சைக்கிளிஸ்ட்கள் சில்வர்டவுன் சுரங்கப்பாதை வழியாக நதியைக் கடக்கலாம்.

பிரத்தியேக ஷட்டில் பேருந்து சேவை மூலம் தங்கள் சைக்கிள்களைப் பாதுகாப்பான முறையில் மறுகரைக்குக் கொண்டு செல்ல சைக்கிளிஸ்ட்களுக்கு இது உதவும், இந்தச் சேவை 7 ஏப்ரல் 2025 தொடங்கி குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

இந்தச் சேவை தினமும் 06:30 – 21:30 வரை (கிறிஸ்துமஸ் நாள் தவிர்த்து) ஆற்றின் இருபுறமும் சைக்கிள் வழித்தடங்களை இணைக்கும் வகையில்
சீகல் லேன், மில்லினியம் வே ஷட்டில் நிறுத்தங்களுடன் இயக்கப்படும்.

புதிதாக சைக்கிள் ஓட்டப் பழகுபவர்கள் அல்லது சைக்கிள் ஓட்டும் திறனை மெறுகேற்றிக் கொள்ள விரும்புபவர் என அனைத்துத் தரப்பினருக்கும் இலவச சைக்கிள் ஓட்டும் பயிற்சி வழங்கப்படுகிறது. நீங்கள் ஆன்லைனிலோ, உங்கள் பர்ரோவில் உள்ள பயிற்சியாளரிடம் தனிநபராக அல்லது குழுவாகவோ கற்றுக்கொள்ளலாம் (நிதிஉதவி மற்றும் கிடைக்கும் நிலைக்கு உட்பட்டது).

இலவச சைக்கிள் ஓட்டும் பயிற்சிக்குப் பதிவுசெய்ய tfl.gov.uk/cycle-skills இணையதளத்தைப் பார்வையிடவும்

# நகர் முழுவதற்குமான பொதுப் போக்குவரத்து

ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்ற கட்டணத்தில் பயணம் செய்ய பேருந்து, டியூப், DLR , டிராம், எலிசெபத் லைன் அல்லது லண்டன் ஓவர்கிரவுண்டு போன்ற பல்வேறு விருப்பங்களில் இருந்து தேர்வுசெய்யலாம்.

அதிகப் பயன்பாடு இல்லாத நேரங்களில் பயணிப்பது இன்னும் எளிதாகவும் அமைதியாகவும் மாறிவிட்டது – பயணத்திற்கு முன் கட்டணங்களை அறிந்துகொள்ள tfl.gov.uk/fares இணையதளத்தைப் பார்வையிடவும்.

பொதுப் போக்குவரத்து மூலம் பயணிப்பதை இன்னும் எளிதாக்கும் விதத்தில் லண்டன் புறநகர்ப் பகுதிகளுக்கும் பேருந்து வழித்தடங்களை விரிவாக்குவதற்கு லண்டன் மேயர் மற்றும் TfL திட்டமிட்டு வருகிறது.

எங்கள் அதிகாரப்பூர்வ TfL Go பயணச் செயலியில் கிடைக்கும் வரைபடங்கள் மற்றும் நேரடி பயணப் புதுப்பிப்புகளின் மூலம் நம்பிக்கையுடன் லண்டன் முழுவதற்கும் பயணிக்கலாம், இந்தச் செயலியை Apple App Store மற்றும் Google Play storeஇல் இருந்து இலவசமாகப் பதிவிறக்கிக் கொள்ளலாம்.

மாற்றுத்திறனாளிகளுக்கான பயணத் திட்டமிடல், நிலையத்தில் கிடைக்கும் வசதிகளைத் தேடுதல், லைன்கள், நிலையங்கள், லிஃப்ட்கள் சேவை நிறுத்தப்படும் நேரம் அல்லது சேவை பாதிப்புகளை நிகழ்நேரத்தில் அறிந்துகொள்ளுதல் போன்றவற்றிற்கு TfL Go உதவும்.

அத்துடன் வேகமான பொதுப் போக்குவரத்து வழித்தடங்கள், கூடுதல் பயண விருப்பங்களை வழங்கும் மாற்று வழித்தடங்கள், உங்கள் பயணங்கள் அனைத்திற்கும் அல்லது பகுதியளவு பயணத்திற்குப் பயன்படுத்தக் கருதக்கூடிய நடைபயண, சைக்கிளிங் வழித்தடங்கள் போன்றவற்றையும் இந்தச் செயலி மூலம் அறிந்துகொள்ளலாம்.

tfl.gov.uk/silvertown-blackwall

24 மணிநேர பயணத் தகவல்கள்
**0343 222 1234***

மின்னஞ்சல் புதுப்பிப்புகளுக்குப் பதிவுசெய்ய
tfl.gov.uk/emailupdates

tfl.gov.uk/socialmedia

*சேவை மற்றும் நெட்வொர்க் கட்டணங்கள் பொருந்தக்கூடும். விவரங்களுக்கு tfl.gov.uk/terms இணையதளத்தைப் பார்வையிடவும்.

பதிப்பு 1.0.
வெளியிடப்பட்ட தேதி 20 ஜனவரி 2025